O.S.No.128/2016
26.07.2022

வா.சா.1.திரு.ஆறுமுகம் த.பெ. அர்ச்சுனப்பா என்ற அர்ச்சுனன்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

3 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

நான் 3ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எந்த வருடம் 3ம் வகுப்பு படித்தேன் என்றால் தெரியாது. அய்யங்காளை 1997-ல் இறந்தார் என்பதற்கு அவருடைய இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அய்யங்காளை மனைவி மலேசியாவில் இருந்ததாகவும், நான் அவரை அழைத்து வந்த அய்யங்காளையுடன் சேர்த்து வைத்ததாக எனது நிருபண வாக்கமூலத்தில் சொல்லி இருப்பது பொய்யான சங்கதி என்றால் சரியல்ல. நான் அவ்வாறு மலேசியா சென்று வந்ததற்கு பாஸ்போர்ட் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அய்யங்காளை வாகன விபத்துக்குள்ளானர் என்று நான் கூறியதால் அதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அய்யங்காளை வைத்திய செலவுக்கு நான் ரூபாய் 2 லட்சம் கொடுத்ததாகவும், அதற்கு ஈடாக அவருடைய 1/5 பாக சொத்தை எனக்கு விடுதலை செய்ததாக சொல்லி இருப்பது முற்றிலும் பொய்யான சங்கதி என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி என்னிடம் ரூபாய் 2 லட்சம் அவருடைய கேளிக்கை ஆடம்பர செலவிற்காக வாங்கியதாகவும், அந்த தொகையை திரும்ப செலுத்தும் பொருட்டு அவருடைய 1/5 பாக சொத்தை எனக்கு விடுதலை செய்து கொடுத்தாகவும் நான் எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லி இருப்பது பொய்யான சங்கதி என்றால் சரியல்ல. மேற்படி அய்யங்காளை மற்றும் 4ம் பிரதிவாதி ஆகியோர் தங்களுக்குரிய 1/5 பாகம் சொத்துக்களை எனக்கு விடுதலை ஏற்படுத்திக் கொடுத்தாக சொல்லி இருப்பது சம்பந்தமாக இந்த தாவாவில் நான் விளம்புகை பரிகாரம் எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான். அய்யங்காளைக்கு ரூபாய் 2 லட்சமும், 4ம் பிரதிவாதிக்கு ரூபாய் 2 லட்சமும் நான் தனிப்பட்ட முறையில் கொடுக்கும் அளவிற்கு எனக்கு போதிய வருமானமும் சொத்துக்களோ கிடையாது என்றால் சரியல்ல, நான் கேரளாவில் வேலை பார்த்து பணம் வைத்திருந்தேன். அவ்வாறு எனக்கு போதிய வருமானம் இருந்தது என்பதைக் காண்பிப்பதற்கு ஆதரவாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

எனது தாய் மற்றும் தந்தையார் குடும்ப கருத்தா என்ற முறையில் 3 மற்றும் 5ம் பிரதிவாதிகளுக்கு 21.01.2012 அன்று வா.சா.ஆ-16 ஆவணத்தின் மூலம் கிரயம் எழுதிக்கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி கிரயத்தொகை மூலம் எனது தாய், தந்தையர் அவர்களுடைய மருத்துவ செலவுகள் மற்றும் குடும்ப செலவுகளை பார்த்துக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. 3 மற்றும் 5 பிரதிவாதிகள் வா.சா.ஆ-16 மூலம் பெற்ற கிரய சொத்தினை அன்றைய தேதியில் இருந்து கிஸ்தி மற்றும் இதர வரிகள் கட்டி தற்போது வரை அனுபவித்து வருகிறார்கள் என்றால் எனக்கு தெரியாது, நான் இங்கு இல்லை, கேரளாவில் இருந்தேன். 3 மற்றும் 5 பிரதிவாதிகள் வாங்கிய வா.சா.ஆ-16ல் கண்ட சொத்துக்களில் எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல, இது குறித்து நான் காவல் நிலையத்திலும் புகார் கொடுத்தேன். 3 மற்றும் 5 பிரதிவாதிகள் கிரயம் பெற்ற சொத்தை தவிர்த்து மீதமுள்ள சொத்துக்களில் 5/20 பாகம் தான்

எனக்கு கிடைக்கதக்கது என்றாலும், 13/20 பாகம் கிடைக்கதக்கதல்ல என்றாலும் சரியல்ல. நான் பிராதில் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றாலும், வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.